பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 05 திங்கட்கிழமை (22-10-2001) தொலைபேசி : 3378 ஒலி 315

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(சி-2751)

## முல்லைக் கடலில்

# புலிகள் அதிரடித் தாக்குதல்

# இரு டோறா படகுகள் அழிப்பு

## புலிகளின் தரப்பில் ஐவர் வீரச்சாவு

(வவுனியா விசேட நிருபர்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினரின் "டோறா" ரோந்துக் கலங்களை வழிமறித்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு அதிவேக டோறாப் படகுகள் முற்றாக அழிக்கப்பட்டன.

சுமார் மூன்றரை மணி நேரமாக நடைபெற்ற இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஒரு கடற் கரும்புலி உட்பட ஐந்து கடற்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். இச்சமரின்போது கடற்படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் அதிவேக டோறாப் படகுகள் நேற்றுக் காலை வழிமறித்த கடற் கரும்புலிகளும், கடற்புலிகளும் சுமார் 8½மணி நேரத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இத்தாக்குதலில் நேற்றுக் காலை 9மணியிலிருந்து பிற்பகல் 12.30மணிவரை நீடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இக்கடற் சமரின்போது சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான இரண்டு அதிவேக டோறாப் படகுகள் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. இதனால் கடற்படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது.

இச்சம்பவத்தை அடுத்து

[08ம் பக்கம் பார்க்க]

## முல்லைக் கடலில் மோதல் 5 கடற்புலிகள் வீரச்சாவு

(வவுனியா)

முல்லைத் தீவுக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான மோதல் சம்பவத்தில் கடற்கரும்புலி ஒருவர் உட்பட 5கடற் புலிகள் வீரச்சாவடைந்துள ளதாக புலிகளின் அதிகார பூர்வ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

● கடற் கரும்புலி மேஜர் ரோசா (கணேசன் கற்புக்கரசி) யாழ்மாவட்டம்

● கப்டன் செந்தாயி

(08 ம் பக்கம் பார்க்க)

## வன்னியில் விமானத் தாக்குதல்

(வவுனியா)

முல்லைத்தீவு பகுதியிலுள்ள கிராமங்கள் மீது விமானப் படைக்குச் சொந்தமான குண்டு வீச்சுவிமானங்கள் நேற்று பிற்பகல் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

புதுமாத்தளன் அம்பலவன்

## ஐ. தே. கட்சியின் தேர்தல்

## ஈ.பி. ஆர்.எல்.எவ் புளொட் இணைந்து போட்டி

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர் எல்.எவ் (வரதர்) அணியும் புளொட் அமைப்பும் இணைந்து யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

இரண்டு கட்சிகளும் இணைவது தொடர்பான உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## அமைச்சர் டக்ளஸ் வவுனியாவுக்கு திடீர் விஜயம்

(கொழும்பு)

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வவுனியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அவர் அங்கு ஒரு வார காலம் தங்கியிருந்து மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவாரென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் வவுனியா அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன்ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை அங்குள்ள மக்களுக்கு பெருமளவு நிவாரணப் பொருட்களையும் அமைச்சர் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-5)

## மிதிவெடியில் சிக்கியவர் உதவியின்றி உயிரிழந்தார்

கொடிகாமம் சாவகச்சேரியில் தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற குடும்பஸ்தர் அங்கு மிதிவெடியில் அகப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்துள்ளார்.

இப்பரிதாப சம்பவத்தில் கொடிகாமம் சாவகச்சேரியைச் சேர்ந்த நாகமுத்து சின்னத்துரை (வயது-50) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது நெல்லியடியில் இடம் பெயர்ந்து வசிக்கும் பிரஸ்தாப நபர் நேற்று கொடிகாமத்திலுள்ள தனதுவீட்டைப் பார்க்கச் சென்றுள்ளார்.

அங்கு பிறபகல் 2 மணியளவில் மிதிவெடியில் அகப்பட்டு வலது கால் சிதறிய நிலையில் உதவிக்கு எவருமின்றி அவ்விடத்திலேயே மயக்கமடைந்துள்ளார்.

பிற்பகல் 5.30 மணியளவில் அவ்விடத்துக்கு சென்ற இராணுவத்தினர் பிரஸ்தாப நபரை அங்கிருந்து மீட்டு தமது முகாமில் ஆரம்ப சிகிச்சையை வழங்கிய பின்னர் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு உயிரிழந்தார் சடலம் மரண விசாரணைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-104

# ஐ. தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகியது

[கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கொழும்பு நகர மண்டபத்தில் வைத்து ரணில் விக்கிரமசிங்காவினால் வெளியிடப்பட்டது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவைதது் பேசிய ரணில்விக்கிரமசிங்கா எதிர்வரும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பதவியில் இருக்கமாட்டார்.

ஜனநாயக விரோதச்செயலில் ஈடுபட்டுவந்த அரசை வீழ்த்துவதற்கு உதவிசெய்த தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இவ்வைபவத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தல்விஞ்ஞாபன வெளியீட்டையொட்டி கொழும்பு நகர மண்டபம் பலத்தபாதுகாப்புக்குட்பட்டிருந்தது. [வ

...நடத்தியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

புதுமாத்தளன் அம்பலவன்

(8ம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் பாலச்சந்திரனின் இறுதிக் கிரியை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரனின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அவரது பூதவுடல் யாழ்

(08ஆம் பக்கம் பார்க்க)

பிரஸ்தாப நபர் நேற்று கொருடாவிலுள்ள தனதுவீட்டை பார்க்கச் சென்றுள்ளார். விசாரணைக்காக வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.(இ-104

## முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

[கொழும்பு)

முன்னாள் சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவிற்கு எதிராக நேற்று மினுவாங்கொட நகரில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் மூவாயிரத்திற்கும் அதிகமான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் அவருக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

இதேவேளை சமுர்த்தி நிதியில் நாலரைக்கோடி ருபா மோசடி இடம்பெற்றமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். [ந-5

# பொலிஸ் அதிகாரிகள் 57 பேருக்கு இடமாற்றம்

(கொழுமபு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் 57 பொலிஸ் உயர் அதிகாரிகள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடம்மாற்றம் பெற்றவர்களுள் 12 பொலிஸ் அத்தியட்சகர்களும், 19 பொலிஸ் உயர் அதிகாரிகளும் அடங்குவர்.

மாத்தறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் வீ. சி. கப்பு ஆராய்ச்சி பொலிஸ் தலைமையகத்திற்கும், மகாவெவபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி வர்ணபண்டார அமைச்சரவைபாதுகாப்பு பிரிவிற்கும், தம்புல்ல உதவிப்பொலிஸ் அத்தியட்சகா வவுனியாவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (வ)

# மீன்பிடித்தடையை நீக்கக்கோரி வடமராட்சியில் நாளை ஹர்த்தால்

(மந்திகை)

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். மீனவர்கள் எவ்விதமான கெடுபிடிகளும் இன்றி நிரந்தரமாக மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து வடமராட்சி, கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம் நாளை செவ்வாய்க்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியிலுள்ள 15 மீனவர் சங்கங்கள் கடந்த சனிக்கிழமை ஒன்றுகூடி மேற்படி முடிவை எடுத்துள்ளன.

வடமராட்சிக் கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம் தமதுகோரிக்கைகள் தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, மீன்பிடி நீரியல்வள அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு மகஜர்

(08 ம் பக்கம் பார்க்க)

# சிறு விளம்பரம்

## வீடு தேவை

யாழ் நகரப் பகுதியில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்கக் கூடிய வீடு அல்லது அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி விளம்பர இல. 229, மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம்.

(C/2761)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் புடைவைக் கடை ஒன்றிற்கு பெண் கணக்காளர் தேவை சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-228, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம்.

(C-2759)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பம் 35வயது அழகிய பெண்ணுக்கு இலங்கையில் அரசாங்க வங்கி உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை; தொழில் படித்து தனிச் சேவை செய்ப வரும் கவனத்தில் எடுக்கப்படும் மிகச் சிறந்த சீதனம் கொடுக்கப்படும் திருமண நிறுவனங்களுக்குச் சேவைக்குரிய பணம் கொடுக்கப்படும். சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-227, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம்.

(3871)

## மாணவர்கள் ஐவர் கைது

(இருபாலை)

தனியார் கல்வி நிலையத்திலிருந்துவீடு திரும்பிக் கொண்டிருந்த உயர்தர மாணவர்கள் ஐவர் நேற்று நண்பகல் நல்லூர் சங்கிலியன் வீதிக்கு அண்மையில் வைத்து மோட்டார் சைக்கிள் இராணுவப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 2002ம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-221)

## வலி. தென் மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## 'மாபெரும் விளையாட்டுப் போட்டி2001'

## பரிசளிப்பு விழா

இடம்: மானிப்பாய் ரவீந்திரன் கலாசார மண்டபம்

நேரம்: பி. ப. 2 00 மணி (பு. நே.)

காலம்: நாளை (23.10.2001) செவ்வாய்க்கிழமை

தலைமை: வெலிச்சோர் அன்ரன்ஜோன்சன் ஜே.பி.யு.எம்
(தலைவர், வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.)

பிரதம விருந்தினர்

உயர்திரு. ரி. வி. கிருஸ்ணசாமி
(யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

கௌரவ விருந்தினர்

உயர்திரு. என். திரிலோகநாதன்
ஜே. பி. யு. எம்.
தலைவர்,
வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

உயர்திரு. நா. வேதநாயகன்
பிரதேச செயலர், சண்டிலிப்பாய்.

உயர்திரு. இ. வசந்தசேனன்
சட்டத்தரணி, மானிப்பாய்.

உயர்திரு. ந. விவேகானந்தராசா
செயலாளர், இந்து மகா சபை, மானிப்பாய்.

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்:

தமிழ் தாய் வாழ்த்து:

வரவேற்புரை: திரு. பிரான்சிஸ் விக்டர்
செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

ஆசியுரை: அருட்திரு. ஏ. எவ். பெனற்
பங்குத் தந்தை, மானிப்பாய் பங்கு.

பரிசில் வழங்கல்;

விளையாட்டு தொகுப்புரை:
திரு. எம். ஆர். மோகனதாஸ்
விளையாட்டு அலுவலர்,
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

பி. ராஜன் மாஸ்ரர் குழுவின் (கொக்குவில்)
மாபெரும் கராட்டி கண்காட்சி

நன்றியுரை: திரு. செல்வராஜா ரமேஷ் ஜே. பி.
விளையாட்டு இணைப்பாளர்,
உள்ளூராட்சி உதவியாளர்,
வலி தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

குறிப்பு: பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் வீரர், வீராங்கனைகள் குறித்த நேரத்தில் சமுகம் தரவும்.
''அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்''

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.
வலி தென் மேற்கு பிரதேச சபை.

வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

[C-2763]

# இருகட்சிகள் வேட்புமனுத்தாக்கல்செய்தன

(கொழும்பு)

நேற்று முன் தினம் எதிர் வரும்பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரண்டு அரசியற் கட்சிகள் நேற்று தாக்கல் செய்துள்ளன

றுடுணு மக்கள் கட்சி, புதிய இடது சாரி முன்னணி ஆகியவையே முறையேகொழும்பிற்கும், பொலநறுவைக்கும்வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன.

இதே வேளை அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும், காலி, கொழும்புக்கும் இருவேறு சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துளளது.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

## 2002 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

(பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள் கருவாட்டுக் கடைகள்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முப்பத்தொராம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 2001. 11. 07. ஆம் திகதி பி.ப. 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப் பணம் கேள்விப்படிவப் பணத்துடன் ப.சே. வரிஜயும் சேர்த்து செலுத்துவதன் பேரில் 2001. 11. 06. ஆம் திகதி பி. ப. 2.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களைத் தயாரித்து தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்குக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிட்டுப் பதிவுத்தபால் மூலம் 2001.11 07 ஆம் திகதி பி ப 2.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்துக்கு முன்னர் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 2001.11.07ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும், அத்தருணம் கேள்விக்காரரோ, பிரதி நிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகள் இறைச்சிக்கடை நடத்துவதற்குக் காணிச் சொந்தக்காரரிடமிருந்து ஒப்பந்தக் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்ற பின்னர் உரிய முறைப்படி விண்ணப்பிக்காவிடின் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் நேரத்துக்கு முன்னதாகச் சபைக்கு ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரரின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணங்காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு. சந்தைகளை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியில் 3% திற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## அட்டவணை

| குத்தகை விபரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத்தொகை (ஜி. எஸ். ரி. நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 500 | 5000 | 1,99,91,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடைசுன்னாகம் | 100 | 200 | 2000 | 5,78,000/- |
| 3. ஆட்டிறைச்சிக் கடை சுன்னாகம் | 100 | 150 | 1500 | 55,000/- |
| 4. கருவாட்டுக்கடை இல. 3 | 60 | 50 | 100 | 6,700/- |
| 5. கருவாட்டுக்கடை இல. 4 | 60 | 50 | 100 | 5,600/- |
| 6. கருவாட்டுக்கடை இல. 5 | 60 | 50 | 100 | 11,275/- |
| 7. கருவாட்டுக்கடை இல. 6 | 60 | 50 | 100 | 3,850/- |
| 8. கருவாட்டுக்கடை இல. 7 | 60 | 50 | 100 | 3,850/- |
| 9. உடுவில் கீளிச் சந்தை | - | 150 | 500 | 93,500/- |
| 10. உடுவில் ஆலடிச் சந்தை (சந்தைக் கட்டடம் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும்) | - | 150 | 500 | 5,000/- |
| **2. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. மருதனார்மடம் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டிதரிப்பிடம் உட்பட) | | 500 | 5000 | 18,75,000/- |
| 2. இணுவில் சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 100 | 1000 | 56,000/- |
| 3. இணுவில் ஆட்டிறைச்சிக்கடை | 100 | 150 | 1500 | 55,000/- |
| 4. மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை | - | 150 | 1500 | 55,000/- |
| 5. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 100 | 150 | 1500 | 56,000/- |
| **3. ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. ஏழாலை சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | - | 250 | 1000 | 16,600/- |
| 2. ஏழாலை சந்தைமாட்டிறைச்சிக் கடை | - | 150 | 1500 | 44,000/- |
| **4. இழுபொறி இயந்திரம்** | | | | |
| பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்துதல் 01-10-2001தொடக்கம் 31-12-2002 வரையான காலப் பகுதிக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குப்பை கூழ களை அகற்றுவதற்கு இழுபொறி இயந்திரம்வாடகைக்கு அமர்த்துதல் (தன்னியக்க உயர்த்தி இருத்தல் வேண்டும்) | - | 100 | 500 | |

முக்கிய குறிப்பு: அத்துடன் கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையுடன் மேலதிகமாக பண்டங்கள், சேவைகள் வரியான 12.5% ஐயும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

க. கமலசேகரன்
தலைவர்
வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
2001-10-19

(C-2764)

# வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதில்

# ஐ.தே.கட்சிக்குள் இழுபறி நிலை

(கொழும்பு)

எதிர்வரும்பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் அரசியல் கட்சிகள் பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து பிரிந்து வந்தவர்களுக்கு வேட்பாளர் பட்டியலிலும் தேசியப் பட்டியலிலும் முன்னுரிமை வழங்குவதை கட்சியின் முக்கியஸ்தர்கள் எதிர்த்து வருவதினால் வேட்பாளர் பட்டியலைப் பூர்த்தி செய்வதில் இழுபறிநிலை இருந்து வருவதாகக் கட்சிவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியல் நாளை மறுதினம் பூர்த்தியாக்கப்பட்டு விடும் என்று அதன் செயலாளர் எம்.ஜயரத்னா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியும் தனது வேட்பாளர் பட்டியலைப் பூர்த்தி செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

தென்னிலங்கையில்இரண்டு சுயேட்சைக் குழுக்கள் தேர்தலுக்கானவேட்புமனுக்களை தாக்கல்செய்துள்ளன.

(வ)

## யாழ். முக்கோண கிரிக்கெற் சுற்றுப் போட்டி வவுனியா அணி தோல்வி

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டக் கிரிக்கெற அணிகளுக்கிடையே நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முக்கோண கிரிக்கெற் சுற்றுப் போட்டியில், வவுனியா மாவட்ட அணியும் யாழ் மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ் மாவட்ட அணியிடம் வவுனியா மாவட்ட அணி எட்டு ஓட்டங்களால் தோல்வி கண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் அணி 35பந்துமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. அணியில் துடுப்பெடுத்தாடிய எஸ் லக்ஸ்மிகாந் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப்பெற்றார்.

பதிலுக்கு களமிறங்கிய வவுனியா அணி ஒன்பது விக்கெற் இழப்புக்கு 159 ஓட்டங்களைப்பெற்று தோல்வியைத் தழுவிக் கொண்டது

அணியின் தலைவர் ஆர். றொபின்சன் றோய் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களை பெற்றார்.

[இ-10-223]

## செயலமர்வு

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளில் தரம்3-6 வரையான வகுப்புக்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 9,00மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுளளது.

(செ-79)

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

(இணுவில)

உடுவில் கல்விக கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தொண்டுபடும் செயல் முறை மற்றும மனைப் போட்டிகளுக்காக மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாளை செவ்வாய்க் கிழமைக்குமுன்பாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன அறிவித்துள்ளார்.

(செ-49)

## ஜி. எல். பீரிஸின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பணிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸின் பாதுகாப்புககடமையில் ஈடுபடும் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களின் எண்ணிக்கையை 12 ஆக அதிகரிக்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் பாயீஸ் முஸ்தபா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

விசேட அதிரடிப்படை கொமாண்டோக்களின் பாதுகாப்பை அரசாங்கம் விலக்கிக் கொண்டமை தொடர்பாக மனிதவுரிமை ஆணைக்குழுவிடம அவர் முறையிட்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் கொழும்பில நடைபெற்ற போது பீரிஸ் சார்பாக ஆஜரான சட்டத்தரணி பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து இவரது உயிருக்கு அச்சுறுத்தல்உள்ளதாக குறிப்பிட்டார். இதனை அடுத்து பீரிஸின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு பணிக்கப்பட்டது.

(ந-5)

## கட்புல செவிப்புல சாதன கூடம் திறப்பு

(யாழ்ப்பாணம)

பிரதேச பாடசாலைகள் அபிவிருத்தி நிதியின் மூலம் யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் புதிதாகப புனரமைக்கப்பட்ட கட்புலன் செவிப்புல சாதன கூடம இன்று திங்கட்கிழமை சண்டிலிப்பாய்கோட்டக்கல்வி அதிகாரி க. தனபாலசிங்கத்தினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

(உ,

## பரு.ஆஸ்பத்திரிக்கு நவீன பல் பிடுங்கும் இயந்திரம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையிலை பற்சிகிச்சைப் பிரிவிற்கு நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய பல்பிடுங்கும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசினால வழங்கப்பட்ட இவ் இயந்திரத்தை பொருத்துவதற்கு உரிய தொழில் நுட்பவல்லுநர்கள் இல்லாமையினாலேயே இவ்வளவு காலமும் பொருத்தப்படாது இருந்தது எனத் தெரிவிக்கபபடுகிறது

(செ-23)

## நாளை பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு பிரதேச சபையால் அண்மையில நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிக்கு, பிரதேச சபை 'ரவீந்திரன், மண்டபத்தில் நடைபெறவுளளது.

பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோண்சன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராகக்கலந்து கொளகிறார்.

(செ- 232)

## பரு. வைத்தியசாலையில் எக்ஸ்றே பிரிவு ஸ்தம்பிதம்

### இரசாயனப் பொருள இல்லையாம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் எக்ஸ்றே படங்கள் கழுவுவதற்கான இரசாயனப் பொருள இல்லாமையால் எக்ஸ்றே பிரிவு ஸ்தப்பிதம் அடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இங்கு சிகிச்சைக்குவரும் நோயாளரின் எக்ஸ்றே படங்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கே அனுப்பவேண்டியுள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட நவீன வசதிகளை கொண்ட எக்ஸ்றே இயந்திரம் பத்து வருடங்களின் பின்னர் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அதனை பரீட்சித்துப் பார்க்கக் கூடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ-23)

## நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக் கல்வி மாணவருக்கான 'எப்படிக் கற்போம் கற்றல் கற்பித்தல் உத்தி' பாடல் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2. 30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலச்சுமிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(செ- 19)

## வன்செயலைத் தடுக்க பொலிஸார் தீவிரம்

(கொழும்பு)

அரசியல்கட்சி வேட்பாளர்கள் மத்தியில் பலத்தபோட்டி நிலவி வருவதால் வன்முறைகள் வெடிப்பதைத் தவிர்ப்பதற்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுமுடிந்த கையோடு பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

(வ)

## நவராத்திரிப் பாமாலை



இலக்குமி துதி

### மூவரும் அருள் தருவீர்

மலை மகளே வந்திடுவாய் வீரந்தனை
தருவாய்
அலை மகளே வந்திடுவாய் மாறாச் செல்வந்
தருவாய்
கலை மகளே வந்திடுவாய் கலைகள் பல
அருளிடுவாய்
மூவரும் அருள் தருவீர் மக்கள் நலமாய்
வாழ்ந்திடவே.

**வே. மயூரன்**
தரம- 11
யாழ். உடுத்துறை ம.வி.

### 'வரம் தருவாய் தேவி'

வளமான வாழ்வு எமக்கு
அளித்திடுவாய்- வராகி
வற்றாத கல்வியை எமக்கு
தந்திடுவாய்- வாணி
குன்றாத செல்வம் எமக்கு
வழங்கிடுவாய்- லக்ஷ்மி
என்றும உன்னை மறவாத வரம்
எமக்கு அளித்திடுவாய்

**செ. ஐங்கரன்**
பரியோவான கல்லூரி.

### முச்சக்திகளே

வீரத்தை தந்திடுவாய் துர்க்கை தேவியே
செல்வத்தை தந்திடுவாய் திருமகள் தேவியே
கல்வியைத் தந்திடுவாய் கலைமகள் தேவியே
போற்றுகிறோம் ஐப்பசி மாதத்திலே!

**க. பார்க்கவி**
தரம -5
யாழ். கச்சாய் அ.த.க. பாடசாலை

### நிறையத் தருவாயே!

கேட்டதைக் கொடுப்பவளே
கேள்வியின் நாயகியே
பாட்டெழுதித் துதிக்கிறேன்
பணம நிறையத் தருவாயே

**செ. சுகந்தி**
வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

## நல்லூர் பிரதேச செயலக சிறுவர்முதியோர்தினவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலகம் நடாத்தும சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை மு. ப. 10 . 00மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் நா. வேதநாயகன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலர் எஸ். வேன் முருகோன்பிள்ளை 'முதியோர் நலன்பேணல' என்னும் தலைப்பிலும், நல்லூர்க் கோட்டஉதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் 'கட்டாயக் கல்வி' என்னும் தலைப்பிலும், சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி கே. சிவராசா ''சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகமும்' என்னும தலைப்பிலும் சிறப்புரைகள் ஆற்றவுள்ளனர்.

(செ-9-19)

## இளைஞர் அட்டகாசம் பொது மக்கள் விசனம்

(வல்வெட்டித்துறை)

உடுப்பிட்டிச்சந்திக்கும்,வல்வெட்டித்துறைச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதிகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் பெரும விசனமடைந்துள்ளனர்.

இளைஞர்களின் இச் செயலால் பொது மக்கள போக்குவரத்தில் பெருங்கஷ்டங்களை எதிர்நோக்குவதுடன் பெற்றோர் தமதுபிள்ளைகளைப் பாடசாலை, ரியூசன் ஆகியவற்றுக்கு கூட்டிச் சென்று கூட்டி வரவேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(செ-217)


### சுக வாழ்வு

எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டு 6-12 கிழமையில்
பிற்பொருளெதிரியை குருதியில் காணலாம்.
எயிட்ஸ் வருமுன் காப்போம்.

**தரிசனம்**

# செய்தித் துளிகள்

## நூலகவாரம் அனுட்டிக்க ஏற்பாடு

(கோப்பாய்)

தேசிய நூலகநாள் நிகழ்வுகள் ஒக்ரோபர் மாதம் நாலாவது வாரத்தில் கொண்டாடப்பட வேண்டுமெனவும், யாழ் மாவட்டத்திற்கான நிகழ்வுகள் இன்று இணுவில் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவும் யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந வரதராசஜா தெரிவித்தார்.

இக்காலப்பகுதியில் யாழ் வலயப் பாடசாலைகள்வாசிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தல்என்றகருப் பொருளை மையமாக வைத்து அதற்கான அறிக்கையை வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ந-79)

## போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(கோப்பாய்)

இவ்வருடம் நடைபெறவுள்ள யாழ். வலய மட்ட விளையாட்டுப் போட்டிக்கான 19 வயதுக்குட்பட்ட பட்மின்ரன் (ஆண், பெண்) மேசைப்பந்து (ஆண், பெண்), 13 வயதுக்குட்பட்ட தாச்சிப் போட்டி (ஆண், பெண்) ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை இதுவரை அனுப்பிவைக்காத பாடசாலைகள நாளை வரை அனுப்பி வைக்கலாம் என்றும், படமின்ரன் போட்டி நிகழ்வுகள் வரும் புதன் பி.ப 2.00மணிக்கு சென் ஜோன்ஸ் அக்கடமியிலும், மேசைப்பந்துப் போட்டி நிகழ்கள் 25ம் திகதிகாலை 10.00 மணிக்கு சுண்டுக்குளி வைஎம்.சி.ஏ மண்டபத்திலும் நடைபெறும் என்றும யாழ் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராசா தெரிவித்துள்ளார். (ந-79)

## சுற்றிவளைப்பு

(கல்வயல்)

கடந்த சனிக்கிழமை அதிகாலை தென்மராட்சி கிழக்கில்கெற்பலி, மிருசுவில், உசன் விடத்தற்பளை, கச்சாய் கொடிகாமம் முதலிய பகுதிகள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுபாரிய தேடுதல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொது மக்கள் அனைவரும் கொடிகாமப் பொலிஸ் நிலையம் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆட யாள

## வாணி விழா

(வல்வெட்டித்துறை)

கம்பர் மலை பாரதி சனசமூக நிலையத்தினரின் வாணி விழா நிகழ்வு விஜய தசமி அன்று கொண்டாட உள்ளதாக நிலையத்தின் உப செயலாளர் பா. ஜெயசெங்கன் தெரிவித்துள்ளார். (செ-217)

## ஏடுகள் இலவசம்

(யாழ்ப்பாணம்)

நவராத்திரியையொட்டி வித்தியாரம்பத்திற்காக பாரம்பரிய முறைப்படி பனை ஒலையில் ஏடுகளைத் தயாரித்து அண்ணா கோப்பி அதிபர் செ. நடராசா வெளியிட்டுள்ளார்.

இலவசமாக வெளியிடப்பட்டுள்ள ஏடுகளை பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் மற்றும் கோயில்கள் இணுவிலுள்ள அண்ணா கோப்பி தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## பேராசிரியருக்கு அஞ்சலி

(யாழ்பபாணம்)

யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதியும், சிறந்த புவியியற் துறைப் பேராசிரியரும் கல்விமானுமாகிய பேராசிரியர் செ. பாலச்சந்திரனின் மறைவு எமது தமிழ் நிலத்தில் பெரும் வெற்றிடத்தைஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்து சமயப் பேரவை தனது அஞ்சலிச் செய்தியில் தெரிவித்துளளது. (செ)

## பல்கலையில் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இன்று காலை8.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் கலைப் பீடாதிபதி செ. பாலச்சந்திரனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அனைத்துபீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியத செயலாளர் எம். சுகுணேஸ்வரன் அறிவித்துள்ளார். செ)

## ஒரிஸா காங்கிரஸ் தலைவர் பட்நாயக் பதவி விலகினார்

(புதுடில்லி)

ஒரிஸா மாநில காங்கிரஸ் கட்சித தலைவர் ஜே வி பட்நாயக்கா பதவியிலிருந்து

### ஆசிரியர்களுக்கு

# ஆகக்குறைந்தது ரூ. 5 ஆயிரம் சம்பளமாக வழங்க வேண்டும்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு ஆகக் குறைந்த சமபளமாக ஐயாயிரம்ரூபா வழங்கப்படவேண்டும்என தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடமும் கல்வியமைச்சரிடமும் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இரண்டாயிரத்து 500 ரூபாவை மட்டுமே சம்பளமாகப் பெறுகின்றனர்.

பல பட்டதாரிகள் கூட இதே சம்பளத்தை பெற வேண்டியுள்ளது. எனவே இரண்டாயிரத்து 500 ரூபா சம்பளம்பெறும் ஆசிரியர்களின் குறையை போக்கும் வகையில் அவர்களுக்கு ஆகக் குறைந்தது ஐபாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் ஆசிரியர்சேவையின் பதவி உயர்வுகள் இதுவரைகாலமும் வழங்கப்பட்டதுபோல் சேவை மூப்பு அடிப்படையில் வழங்கப்படுவதுடன், பரீட்சைகள் இன்றி பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் இதுவரைகாலமும் சம்பள உயர்ச்சி வழங்கபின்பற்றிய முறையையே தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் எனவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## இராசி பலன்

(22-10-2001)

ஐப்பசி 5 திங்கள்
ஷஷ்டி மு இ 9 35 வரை
மூலம் இ.ப 2 24 வரை
இராகுகாலம் 7.32-9.02
சுபநேரம் 12.20-1.32
ஷஷ்டிவிரதம்

**மேடம்**

ஆன்றோர் ஆசி, உடல் வியாதி, புதிய திட்டமிடல், மனச்சஞ்சலம்.

**இடபம்**

கடன் பிரச்சினை, அமைதிக் குறைவு, திடீர் நன்மை, காரிய தடங்கல்.

**மிதுனம்**

செல்வாக்கு, போசன சுகம், உறவினர் வருகை, முயற்சி கைகூடும்.

**கடகம்**

காரிய அனுகூலம், சத்துரு ஜெயம், திடீர் பயணம், சந்தோஷ சம்பவம்.

**சிங்கம்**

சொத்துப் பிரச்சினை, தாழ்ந்த சுபாவம், அரச நன்மை, முயற்சி தாமதம்.

**கன்னி**

மனச் சஞ்சலம், அற்பர் உறவு, காரிய தாமதம்.

## ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்க முடியாதுள்ளது வலயக் கல்விப்பணிப்பாளர்

(கோப்பாய்)

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, நடனம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்க்கமுடியாதுள்ளது.

இவ்வாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வலய அதிபர்களுக்கான கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். இக்கூட்டம்அண்மையில்யாழ், வலயக்கல்விப்பணிப்பாளர் வலயமாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அவர்மேலும் பேசுகையில் ஆரம்பக்கல்விக்கென நியமனம்பெற்ற ஆசிரியர்களில் கூடுதலானோர் வேறு நெறிகளுக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். கலாசாலை உயர்கல்வி அமைச்சுடன் தொடர்புடையதால் இதைத் தடைசெய்வதில் சில இடையூறுகள் உள்ளன. படிப்படியாக இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார். (எ-79)

## ஓரிரு தினங்களில் அத்தியாவசியப் பொருள் விலைகள் குறையும்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்னும்சில தினங்களில் குறைந்து விடும் என சந்தைப்படுத்தல் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகஆராய்வதற்காக தனி நபர் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

கோதுமைமா, சீனி, பருப்பு பால்மாவகைகள்போன்றவை உட்பட அன்றாடநுகர்வுப் பொருட்கள் பலவற்றினது விலை குறைப்பு தொடர்பாகவே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

அத்துடன் பொருட்கள் சேவைகள்மீதான (ஜி எஸ்.ரி) வரியைக் குறைப்பது தொடர்பாக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (செ)

## நலன்புரி முகாமில் சுகாதார பயிற்சி வகுப்பு

(கல்வயல்)

பட்டினிக்கு எதிரான நிறுவனம் சுன்னாகம் சபாபதிபிள்ளை வீதியில் உள்ளநலன்புரி முகாமில் நான்கு மலசல கூடங்களைக் கட்டி பூர்த்தி

சோதகர் சிவகுருநாதன் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின திட்டமிடற் பணிப்பாளர் க.இராஜேந்திரன் ஆகியோர் நடத்தினர்.

நோய்களும சுகாதார வாழ்

ரும் கொடிகாமப் பொலிஸ் நிலையம் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆட யாள அட்டைகள் வதிவிட அனுமதிப்பத்திரம் ஆகியன பரிசீலிக்கப்பட்ட பின் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதனால் கொடிகாமம் சந்தை நண்பகல் வரை வெறிச் சோடிக் காணப்பட்டது. (எ-111)

## மென்பந்து கிரிக்கெட்

(இருபாலை)

கோப்பாய் வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் 15 ஒவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இன்று திங்கட்கிழமை,

காலை 8.30 மணிக்கு கின்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி மத்தி அணியும்;

மு.ப 10.30 மணிக்கு ஈகிள் அணியை எதிர்த்து கொக்குவில் கே.சி.சி.சி அணியும்:

பி.ப 2.30 மணிக்கு கட்டப்பிராய் முழுமதி அணியை எதிர்த்து விக்றி அணியும்;

பி.ப.4.30 மணிக்கு மானிப்பாய் பரிஷ் அணியை எதிர்த்து நல்லூர் ஐக்கிய அணியும் மோதவுள்ளன.

(செ-221)

(புதுடில்லி)

ஒரிஸா மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜே வி பட்நாயக்கா பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு வேண்டுகோளுக்கிணங்க நேற்று முன்தினம் சோனியாகாந்தியிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார்.

ஒரிஸா மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை அடுத்தே புதுடில்லி காங்கிரஸ் தலைமைப்பீடம் ஜே.வி. பட்நாயக்கைப் பதவி விலகும்படி கோரியுள்ளது. (து)

## ஸாம்பியாவின் ஜனாதிபதி

(லண்டன்)

ஸாம்பியாவின் ஜனாதிபதியாக ஜெட்யாம் ஜெர்ணி இரண்டாவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதன்படி ஸாம்பியாவின் ஜனாதிபதியாக இன்னும் 5 ஆண்டுகள் பதவி வகிக்க இருக்கிறார்.

52 வீத வாக்குகள் பெற்று போட்டியில் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

இராணுவப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த ஜெட்யாம் தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். [து]

### கன்னி

மனச் சஞ்சலம், அற்பர் உறவு, காரிய தாமதம், கலகம்.

### துலாம்

இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, தனவரவு, காரிய நன்மை.

### விருச்சிகம்

முயற்சி தாமதம், திடீர் நன்மை, கௌரவக் குறைவு, வீண் செலவு.

### தனுசு

நன்மை விருத்தி, குடும்ப சுகம், நல்ல காரியம், உடல் நலம்.

### மகரம்

தடுமாற்றம், வீண் அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், பிதா சிந்தை.

### கும்பம்

செல்வாக்கு, குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

### மீனம்

தொழில் சிறப்பு, பிறர் உதவி, நல்ல செய்தி, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

பிள்ளை வீதியில் உள்ள நலன்புரி முகாமில் நான்கு மலசலகூடங்களைக் கட்டி பூர்த்தி செய்ததையடுத்து அவற்றைச் சுகாதாரம் பேணும்வகையில் பாவிப்பது குறித்து அண்மையில் ஒரு பயிற்சி வகுப்பினை நடத்தியது.

மேற்படி முகாமைச்சேர்ந்த அறுபதுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட இப்பயிற்சி வகுப்பினை உடுவில பகுதி பொதுச் சுகாதாரப்பரிசோதகர் லோ. ஜெபராஜ், இணுவில் பகுதி பொது சுகாதாரப் பரி

ளர் க.இராஜேந்திரன் ஆகியோர் நடத்தினர்.

நோய்களும் சுகாதார வாழ்வும், குடிநீரைச் சுத்திகரித்து உபயோகித்தல் தொற்று நோய்கள் சுற்றாடல் சுகாதாரம் பேணுதல் முதலிய தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இவைபற்றிய விளக்கங்களை விவரண திரைப்படங்கள், புகைப்படங்கள் மூலம் அளிக்கப் பட்டதோடு கைந்நூலும் விநியோகிக்கப் பட்டது.

(எ-111)

## யாழ்.மாவட்டத்தில்

# வேட்பு மனு தாக்கல்

## சனியன்று இடம் பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் எந்தவொரு கட்சியோ அன்றி சுயேட்சைக் குழுவோ யாழ். மாவட்டச் செயலகத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, செயலகத்தைச் சூழவுள்ள, பகுதிகளில் நேற்று அதியுச்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு,

பெருந்தொகையான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

செயலகக் கடமைகள் வழமைபோல் இடம்பெற்றபோதிலும் பொதுமக்களின் வருகை அங்கு ஓரளவாகவே காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-223-19)

## இன்று ஒரு தகவல்

# யாரையும் ஏமாற்றலாம்

ஓர் ஊரில் பொற்கொல்லன் ஒருவன் இருந்தான். யார் தங்கநகை செய்யக் கொடுத்தாலும், அதே போலப் பித்தளை நகை செய்து கொடுத்து அவர்களை ஏமாற்றி விடுவான் அவன். பொற்கொல்லனின் திறமையைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசன் அவனை வரவழைத்தான். ''யாராக இருந்தாலும் நீ ஏமாற்றி விடுவாயே உன் திறமையைப் பயன்படுத்தி என்னை ஏமாற்று பார்ப்போம். இந்தப் பத்துப் பவுண் தங்கத்தைப் பெற்றுக் கொள். இதில் அழகான சங்கிலி செய்து இங்கே கொண்டுவா உன்னுடன் என் வீரர்கள் இரண்டு பேர் வருவார்கள் என்றான் அரசன்.

தன் வீரர்களை அழைத்து ''நீங்கள் இருவரும் இவன் வேலை செய்யும்போது கவனமாக இருக்க வேண்டும். தங்கத்திற்குப் பதில் பித்தளை மாற்றப் படுமானால் உங்கள் உடலில் உயிர் இருக்காது'' என்றான் அரசன் தங்கத்தைப் பெற்றுக் கொண்ட பொற்கொல்லன் வீரர்களுடன் தன் வீட்டிற்கு வந்தான். அவன் வேலை செய்வதையே வீரர்கள் இருவரும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். மாலை நேரம் வந்ததும் அவன் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்குள் செல்வான். ஆனால் வீரர்கள் அங்கேயே படுத்துக் கொள்வார்கள்.

பத்து நாட்களில் அவன் நகை செய்து முடித்தான். நகையைக் கையில் எடுத்துக் கொண்டு வீரர்களுடன் அரண்மனைக்கு வந்தான். வழியில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடிய ஆற்றைக் கடக்க வேண்டி வந்தது. திடீரென்று பொற்கொல்லன் தடுக்கி விழுந்தான். அவன் கையிலிருந்த தங்கச் சங்கிலி ஆற்றில் விழுந்தது ஒரு நொடிக்குள் அந்தச் சங்கிலியைத் தேடி எடுத்தான் அவன்.

வீரர்களுடன் அரண்மனையை அடைந்தான் அவன், தங்கச் சங்கிலியை அரசனிடம் தந்தான், வீரர்களைப் பார்த்து, 'நீங்கள் கவனமாகத்தானே இருந்தீர்கள்' என்று கேட்டான் அரசன். 'அரசே! நாங்கள் கவனமாகத்தான் இருந்தோம். தங்களிடம் தரப்பட்டிருப்பது தங்கச் சங்கிலிதான், எந்தத் தவறும் நடந்திருக்க வாய்ப்பேயில்லை, என்று இருவரும் உறுதியாகச் சொன்னார்கள். அரசனும் பொற்கொல்லனுக்கு உரிய கூலியை தந்து அனுப்பி வைத்தான்.

பத்து நாட்களில் அந்தச் சங்கிலி கறுக்கத் தொடங்கியது. தன்னிடம் தரப்பட்டது பித்தளைச் சங்கிலிதான் என்பதை உணர்ந்தான் அரசன், திறமையான தன் வீரர்கள் ஏமாந்து இருப்பார்கள் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. உண்மையை அறிய விரும்பிய அவன் பொற்கொல்லனை மீண்டும் வரவழைத்தான். 'உன் திறமைக்குப் பாராட்டுகள்' என் வீரர்கள் அறியாமல் எப்பொழுது எப்படித் தங்க நகையைப் பித்தளை நகையாக மாற்றினாய்? என்று கேட்டான்.

'அரசே! உங்கள் வீரர்கள் திறமையானவர்கள் தான் நகை செய்யுமிடத்தில் நான் நகையை மாற்றிவிடுவேன் என்று கவனமாக இருந்தார்கள். நான் செய்தது போன்றே பித்தளை நகை ஒன்று என்னிடமிருந்து. இவர்கள் எதிர்பாராத இடத்தில் நகையை மாற்றி விட வேண்டும் என்று நினைத்தேன். பித்தளை நகையை நன்கு மெருகேற்றி முதல் நாளே அந்த ஆற்றில் ஓரிடத்தில் போட்டு வைத்தேன். வீரர்களுடன் வந்த நான் அந்த இடத்தில் தவறி விழுவது போல நடித்து என கையிலிருந்த தங்கச் சங்கிலியை அங்கே போட்டுவிட்டுப் பித்தளைச் சங்கிலியை எடுத்துக் கொண்டேன். திறமையிருந்தால் யாரையும் எப்பொழுதும் ஏமாற்றலாம். உங்கள் தங்கச்சங்கிலி இதோ இருக்கிறது. பெற்றுக்கொள்ளுங்கள்' என்று அரசனிடம் நீட்டினான் அவன். நகையைப் பெற்றுக் கொண்ட பொற்கொல்லனின் அறிவுக் கூர்மையைப் பாராட்டினான். □

பேராசிரியர் ஏ. சோதி

# கொழும்பு-வவுனியா பயணிகள் புகையிரதத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பிற்கும் வவுனியாவிற்கும் இடையே சேவையிலீடுபடும் பயணிகள் ரயிலில் கொள்ளைச் சம்பவங்கள் மிகவும் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் புகையிரதப் பகுதி அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்து வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் பயணிகள் சௌகரியமாக பயணம் செய்யமுடியாததுடன் இரவு வேளையில் நித்திரை கொள்ள முடியாது இருப்பதாகவும் இதற்கு அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் நாளுக்கு நாள் தம்மிடம் முறையிடுவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-7)

# மனித உடலைப் புசித்த காட்டு யானை

(கொழும்பு)

காட்டு யானை ஒன்று ஆசிரியர் ஒருவரைத் தாக்கி அவரின் உடலைத் தின்ற சம்பவம் குருநாகல் மாவட்டத்தில் உள்ள மீகாலாவா பொங்கமுவ என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இக்கொடூரச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது

42 வயதுடைய ஈ. எம். முத்துமெனிக்கா என்ற ஆசிரியை சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்து சென்ற வேளை திடீரென வந்தமதங் கொண்ட யானை ஒன்று அவரைத் தூக்கி வீசியுள்ளது.

பின்னர் அவரின் உடலின் அரைப்பாகத்தை தின்றுள்ளது.

அதனை கண்ணுற்ற ஊரவர்கள் யானையைத் துரத்த முனைந்த பொழுது அதுஅவர்களையும் தாக்க முற்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து யானையை துரத்தியுள்ளனர். (செ-7)

# டெங்கு நோயினால் பலியாவோர் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இவ் வருடம் டெங்கு நோய்க்குப் பலியாவோரின் எண்ணிக்கை இருமடங்காகும் அபாயம் நிலவுவதால், நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்கும் வகையில் சுற்றுப்புறச் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாக சுகாதார அமைச்சின் நோய் பரவுவதைத் தடுக்கும் பணியின் உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்து விட்டபடியால் நுளம்புகள் பெருகும் வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன.

இதனைக் கட்டுப் படுத்துவதற்கான ஒரே வழி சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதே எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## தொடரும் கட்டுமானப் பணி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் புதிய கட்டடத் தொகுதி கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. (செ-19)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலய இந்து மாணவ மன்றத்தின் வாணி விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூசை வழிபாட்டை அடுத்து முன்னாள அதிபர் சமூக ஜோதி கா. கணேசதாசன் 'சக்தி வழிபாட்டு மகிமை என்ற பொருளில் சொற்பொழி வாற்றுவார். (செ)

## மாடுகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவில் மழை காலத்தில் மாடுகளிற்கு ஏற்படும் தொண்டை நோய்க்கான தடுப்பூசி போடப்படும்விபரம் வருமாறு;

இன்று திங்கட்கிழமை ஜே. 271 சிறுப்பிட்டி கிழக்கு பிரிவிற்கு சிறுப்பிட்டி சனசமூக நிலையத்திலும்;

ஜே.279அச்செழு பிரிவிற்கு கால் நடைவைத்திய அலுவலகத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

## நிர்வாகக் குழுக் கூட்டம்

(வல்வெட்டித்துறை)

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தின் 125வது நிர்வாக குழுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 3.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்த போதும் பின்னர் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது; (செ-217)

## இலவச வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் பாலபண்டிதர் வகுப்புக்களும், மாணவர்களுக்கான பண்ணிசை வகுப்புக்களும் இலவசமாக 26 ஆம் திகதி விஜய தசமி நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளதாகவும் அப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புவோரை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் மேற்படி பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (எ)

## 15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணி மாகாண போட்டிக்கு செல்கிறது

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்டப்பாடசாலைகளின் 15வயதிற்குட்பட்டகிரிக்கெட் அணி மாகாணமட்டப் போட்டிகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை தம்புள்ளவிற்கு செல்கிறது.

இவர்களுக்கான முதலாவது போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தம்புள்ளவில் நடைபெறவுள்ளது. (செ-217)

## லங்கா சீமெந்து நிறுவன கிடப்புநிலை ஊழியர்களின் நட்டஈட்டுக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கிடப்பு நிலையிலுள்ள லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் சுயவிருப்பு ஓய்விற்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் லங்கா சீமெந்து நிறுவன இணுவில் காரியாலயத்தில் வைத்து காசோலையாக வழங்கப்படவுள்ளன;

இந் நட்டஈட்டுக் கொடுப்பனவு, ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களுக்கே முதலில் வழங்கப்படவுள்ளது;

ஊழியர்கள் தவறாது இக்கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு லங்கா சீமெந்து நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஆர். செல்வநாயகம் அறிவித்துள்ளார். (செ)

## சேவை மூப்பால் பதவிஉயர்வு பெறாது படித்து உயர்வு பெறுக

(வதன்மராட்சி)

வங்கியில் வேலை செய்பவர்கள சேவை மூப்பில் பதவியுயர்வு பெறுவதிலுமபார்க்க, நன்கு படித்து பரீட்சைகளில் சித்தியடைந்து உயர் பதவிகளுக்குச் செல்ல வேண்டும். எப்போதும் இருக்கும் கதிரையில் இருக்காதுவேறு கதிரைக்குச் செல்ல வேண்டும்;

இவ்வாறு மக்கள் வங்கியின் வடவலய பொதுமுகாமையாளரான சி. இளம்பிறைநாதன் மக்கள் வங்கியின் பிரதேச அலுவலகத்தில் நடைபெற்ற 25 வருடங்கள் சேவையாற்றிய வங்கி ஊழியர்களுக்கு பரிசுப் பொருளும் சான்றிதழும் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பிரதேச முகாமையாளர் எஸ். சிவபாதவிருதயர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மக்கள் வங்கியைச் சேர்ந்த ஒன்பது ஊழியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு அசாதாரண சூழ்நிலைகளின் போதெல்லாம வங்கி ஊழியர்கள் தமது உயிர்களையும துச்சமென மதித்து மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் சேவையாற்றியிருக்கிறார்கள். வங்கி ஊழியர்கள் நன்கு படிக்க வேணடும். வங்கி ஊழியர்களின் வாழ்க்கை மேலுமமேம்பாடு அடைய வேண்டும் என்றார்;

மக்கள் வங்கியின் முன்னாள் பிரதேச முகாமையாளரும் இலங்கை வங்கியின் ஓய்வூதியர் சங்கத்தின் தலைவருமான ஆர். சுந்தரலிங்கம் சிறப்புரையாற்றுகையில்:

மக்களுக்குச் சேவை செய்பவர்கள் பாராட்டப்படவேண்டும். இன்று பாராட்டப்படும் ஊழியர்கள தமதுசேவையை, அறிவை, அனுபவத்தை வங்கியின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ளார்கள். குறைபாடுகளோ தோல்விகளோ முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருக்கக் கூடாது என்றார்.

இந் நிகழ்வில் மக்கள் வங்கியில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த வகையில் கே.பாலச்சந்திரன் (யாழ்ப்பாணம்) ரீ. கணேசலிங்கம் (பருத்தித்துறை) டபிளயூ. எஸ். முதலி(யாழ்ப்பாணம) செல்வி எஸ். நாகலிங்கம் (ஊர்காவற்றுறை) திருமதி கோ. சோமசேகரம் (யாழ்ப்பாணம்) எஸ். சத்தியசீலன் (பல்கலைக்கழகக் கிளை) ஜே. யேசுராசா (பருத்தித்துறை) எஸ். யோகராஜா (யாழ்ப்பாணம்) எம். சர்வாநந்தன் (ஊர்காவற்றுறை, ஆகியோர் தங்கப் பவுணும், சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வங்கி ஊழியர் செல்வி எஸ். நாகலிங்கம் நன்றியுரை வழங்கினார். (எ-77)

## சிந்தனைக்கு விருந்து

### அடியாராய்க் கொண்டிரு

இல்லாரை யாரும் இகழ்வரே ஆதலினால்
இல்லாமை இல்லாமல் ஆக்கிடுவாய் - பொல்லா
மிடிபோக்கி எங்களினை மேனிலையில் வைத்துன்
அடியராய்க் கொண்டிடம் மா.

'பழையவன்'

## உலகை உலுக்கும் அந்திராக்ஸிற்கு

# மருந்து கண்டுபிடிக்க முடியும்

### இந்திய மருந்து தயாரிப்பு நிறுவனம் உறுதி

(புதுடில்லி)

உலகத்தையேகிலிகொள்ள வைக்கும் அந்திராக்ஸ் நோயினை முற்றாகத் தடுப்பதற்குரியமருந்திலனத் தாம் தயாரிக்க முடியும் என ஹிமாலய மலையடி வாரத்திலுள்ள பிரதான மருந்து தயாரிப்பு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

'சஸ்க்லோ பிளக்ஸா' என்ற இம் மருந்தினை தயாரிப்பதற்கு இந்திய அரசு அனுமதி அளித்தால் ஓரிருமாதங்களுக்குள் தயாரித்து விடமுடியும் என்றும் அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 'டன்பக்ஸில்' ஆய்வு கூடப் பணிப்பாளர் 'ரமேஷ் ஜாக்கி' தானும் மருந்து தயாரிப்பு பணியில் முழுமூச்சுடன் ஈடுபடத் தயார் எனத்தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

உலகத்தில் நவீன மருந்து வில்லைகளைத் தயாரிப்பதில் பெயர் போன இந்த இந்திய நிறுவனத்திடம் அந்திராக்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மருந்து வில்லைகளைத் தயாரிக்கமுடியுமா?எனக் கேட்டபோதே அந் நிறுவனம் மேற் கண்டவாறு உறுதியாகத் தெரிவித்துள்ளது. (செ-7)

## தலிபான் அமைப்பு தலைவர்

# முல்லா முஹமட் வசித்த இடத்தில் முக்கிய தகவல்கள் திரட்டல்

(காபூல்)

ஆப்கானில் வசிக்கும் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா முஹமட் வசிக்கும் கட்டடமொன்றுக்குள் புகுந்த அமெரிக்கத் துருப்புக்கள் அக் கட்டடத்தினுள் இருந்த நூறிற்கும் மேற்பட்ட சில முக்கிய தகவல்களைத் திரட்டி வந்துள்ளனர்.

இரவு வேளைகளில் விமானம் மூலம் கட்டடத்திற்கு மேலாகப் பறந்து பராசூட் மூலம் கட்டடத்தினுள் புகுந்த துருப்புகள் நவீன கருவிகளின் உதவியுடன் அங்கு பாதுகாப்புடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த சில முக்கிய தடயங்களை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஆப்கானின் முக்கிய கட்டடங்கள், மற்றும் நிலைகள், தாக்கப்பட்ட போதிலும், குறித்த கட்டடம் தாக்கப்படவில்லை இதனுள் முக்கிய தடயங்கள் இருப்பது தெரிந்ததே இவைதாக்கப்படவில்லை என்று அமெரிக்காவின் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் கட்டடத்தினுள் துருப்புக்கள் இறங்கும் போது அதனுள் எவரும் இருக்கவில்லை என்றும் அவர்கள் இல்லை என்பதை அறிந்தே துருப்புக்கள் இறக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி தெரிவித்ததாகக் கூறப்படும் மேற்படி செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும். முக்கிய தடயங்கள் அடங்கிய ஆவணங்கள் அனைத்தும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவைகள் தலிபான் தலைவர் முல்லாமுஹமட் வசித்த கட்டடத்தினிலே இருக்கவில்லை என்றும் அவ்வமைப்பின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் அமெரிக்க இராணுவத் துருப்புக்கள் முல்லாவின் வீடு என நினைத்து வேறெங்கேனும் இறங்கியிருக்கலாம் என்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (செ-7)

## வாஜ்பாய்-முஷாரப் அடுத்த மாதம் சந்திப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப்பும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் அடுத்த மாதம் சந்திக்க இருக்கிறார்கள் என்று பாகிஸ்தான் தெரிவித்தது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சதாத் பத்திரிகையாளர்கள் மத்தியில் கூறுகையில் 'அடுத்த மாதம் 10 ஆம் திகதி நியூ ஜோர்க்கில் ஐ.நா கூட்டத்தில் அதிபர் முஷாரப்பும் பிரதமர் வாஜ்பாயும் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அதன் பின் இரு தலைவர்களும் - சந்தித்துப் பேசுவார்கள என்று குறிப்பிட்டார்.

கடந்த யூலையில் ஆக்ரா மகா நாடு நின்று போனதன் பின் இரு தலைவர்களும் சந்திக்க இருக்கிறார்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

தலிபான் போரில் அமெரிக்கா பாகிஸ்தானை இணைத்துக்கொண்டதால் பாக்- இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

நியூ ஜோர்க்கில் இரு தலைவர்களும் சந்திக்கும் பட்சத்தில் காஷ்மீர் பற்றிப் பேச்சுக்கள் இடம் பெற மாட்டாது என்று அரசியல் அறிவாளர்கள் தெரிவிக்கிறார்கள். (து)

## மோசடிக்காரர்கள்

# பொ.ஐ.ஐ.மு.யை கவிழ்ப்பதற்கு ஒரு போதும் துணை போகேன்

### அனுரா பண்டார நாயக்க

(கொழும்பு)

ஆறு வருடங்கள் ஆட்சி செய்வதற்கு மக்களின் ஆணையைப் பெற்ற ஜனநாயக அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மோசடிக்காரர்களின் பணத்திற்கும் ஆசை வார்த்தைக்கும் அடிபணிய மாட்டேன் என்று சபாநாயகரும் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருமான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கம்பகா மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு பெரும் ஜனநாயகக் கட்சியாகும் கடந்த 50 ஆண்டுகளில் அதுநாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மாபெரும் பணியாற்றியுள்ளது. தற்போது நாடு இனப் பிரச்சினையை எதிர் நோக்கியுள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பாரியபிரச்சினைக்கு தீர்வு காணும் ஆற்றல், திறமை, அர்ப்பணிப்பு நாட்டின் ஜனாதிபதியிடமே இருக்கிறது நாட்டை ஒரு சுதந்திர நாடாக்கவும் மக்கள் சமாதானமாகவாழவும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தவும் ஜனாதிபதியால் தான் முடியும்என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு அனுபவித்து வரும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமானால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் இதற்கென அனைவரும் ஒன்றுபட வேண்டும். இதற்காகவே தான் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி நாட்டின் சுதந்திரத்திற்காக மட்டும் தன்னை அர்ப்பணிக்கும்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாறியுள்ளதாகவும்அவர் தெரிவித்துள்ளார். (செ-7)

## இந்தியாவிலிருந்து புற்றுநோய் நிபுணர்களை இலங்கைக்கு அழைக்க முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு, இந்தியாவிலிருந்து புற்றுநோய் நிபுணர்களைவரவழைக்கச் சுகாதார அமைச்சு முடிவெடுத்துள்ளது.

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துவருகின்றது. இவர்களுக்குச் சிகிச்சையளிக்கப் போதிய மருத்துவ நிபுணர்கள் இங்கு இல்லாமையினாலேயே உலக சுகாதாரஸ்தாபனம் மேற்படி முடிவிற்கு சிபார்சு வழங்கியுள்ளது எனவும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ-3)

## அல்லற்பட்ட மக்களின்

(7ம் பக்கப் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும்; என்ற நல்ல நோக்கில், இந்தத் தொகுப்பினை தமிழில் வழங்கியுள்ளார்.

### கலங்கரை விளக்கம்

பலவழிகளாலும் தனிமைப் படுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாண சமுதாயத்திற்கு இப்படிச் சில கலங்கரை விளக்கங்கள் இருப்பது மனநிறைவு அளிப்பதாகும்;

### சூழ் நிலைகள்

இது தான் சோ.ப. நூலின் வெற்றி காரணமாக அமைகின்றது. இன்றும் நாம் மகா கவி பாரதியாரின் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?' என்ற பாடலைப் பாடிப் பாடி பரவசமாகின்றோம் என்றால், அதற்குநமது சமூக அரசியற் சூழ் நிலைகள் தாம் காரணம்,

கற்பகதருவான பனை மரங்கள் நமதுநாட்டில் வெட்டப்பட்டும், அழிக்கப்பட்டும் வரும் சூழலில் OSADEBAY யின் கவிதை நமக்கு ஔடதமாக அமைகின்றது;

நெஞ்சுக்குள்ளே செல்
வத்தை ஒழித்துவைத்திருக்
கும் பாலும் தேனும் பாயும்
வளமிக்க என்நாட்டின் குறி
யீடாக கம்பீரமாக
நிமிர்ந்துநிற்கும் பாம்
மரமே உன்னைக்
கைதொழுகின்றேன். உனக்
கொரு புகழ்பா இசைக்
கின்றேன்.

இரண்டாந்தர பிரஜையாக ஒதுக்கப்பட்ட உகண்டா காட்டு சீக்கியன் அழுகின்றான்;

'ஒரு பாவமும் அறியாது
கெட்டுப்போனவர்களுக்கு
சடங்கு சம்பிரதாயங்கள்
தேவையில்லை. பலி பீடத்
துக்குக் கடாவை இட்டுச்
செல்லுங்கள். வரலாற்றின்
பாவங்களைக் கழுவுங்கள்'

நெல்சன் மண்டேலா பற்றிய கவிதை நம்நாட்டில் இத்தகைய ப்றொமிதேயுஸ் இன்னும் தோன்றவில்லையா என்ற வினாவை எழுப்புகின்றது.

### கூடுதல் விளக்கம்

கவிதைகள் பல கிறிஸ்தவப் பின்னணி கொண்டு விளங்குகின்றன. இவற்றிற்கு கூடுதல் விளக்கம் கொடுத்திருத்தல் வேண்டும்: அருட்தந்தை ஜெயசீலன் சோ.ப. வுக்கு அவற்றினை விளக்கினார்; சாதாரண மக்களுக்கும் பைபிள் தொடர்கள் விளங்க வேண்டுமே!

சோ.ப.வின் ஆபிரிக்கக் கவிதை என் நெஞ்சைத் தொட்டது. 'என்வாணாள் வீண்போகவில்லை' என்பதை இந்நூல் நிறுவும் என்று சோ.ப. தமது அறிமுகவுரையை நிறைவு செய்கின்றார். இக்கூற்றினை நான் முழுமனதோடு ஆமோதிக்கின்றேன். சோ.ப. தொடர்ந்தும் நமது இலக்கிய உலகின் கலங்கரை விளக்கமாகத் திகழட்டும். □


## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும்
புவியியற்துறைப் பேராசிரியருமான
**செ. பாலச்சந்திரன்**
அவர்கள்

சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
ஊழியர்கள்.
நல்லூர் பிரதேசசபை.

(கி/2767)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி
பேராசிரியர்
**செ. பாலச்சந்திரன்**
அவர்கள்

சிவபதமடைந்தமையை இட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

மக்கள் வங்கி
யாழ் பல்கலைக் கழகம் முகாமையாளர்
ஊழியர்கள்

(கி/2766)

நிறைமொழிமாந்தர்பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்
குறள்

# வலம்புரி

## புவியியலுக்கு ஈந்தளித்தாய்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதிபேராசிரியர்செ.பாலச்சந்திரன் நேற்று முன்தினம் காலமாகிவிட்டார். அவரின் மறைவால் யாழ் பல்கலைக்கழகம் மூத்த பேராசிரியர் ஒருவரை இழந்து விட்டது.

புவியியற்துறை ஆழ்ந்த அறிவுப்புலம்மிக்கதன்சார் அறிஞனை இழந்துள்ளது

இவற்றுக்கு மேலாக, தீவக மண் தன் மடியில் தவழ்ந்த அறிவுசால் மைந்தர்களில் - புவியியற் துறைக்கென்றே; ஈந்தளித்த அறிவாளரை பறிகொடுத்துவிட்டது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் தம் புவியியல் ஆசா-னை இழந்துவிட்டனர்.

இப்படியே பேராசிரியர் பாலச்சந்திரனின் இழப்பின் இழப்பை பட்டியலிடலாம்.

வேலணைத் தீவகத்தில் பிறந்த பாலச்சந்திரன் வேலணை துரைச்சாமி ம. ம. வித்தியாலயத்தில் கற்றவர். ஒரு காலத்தில் யாழ். குடாநாட்டிற்கான அறிவு ஜீவிகளை வழங்குவதில்வேலணைபே ர்வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வித்தியாலயம் பெரும் பங்காற்றியிருந்தது. அக்கல்லூரி தந்த மைந்தர்களில் ஒருவரே பேராசிரியர் பாலச்சந்திரன்.

யாழ்ப்பாணப் புவியியற் துறை, தீவகத்திற்குரியதென்பதுபோல் அத்துறையின் ஆளுகை தீவகம்தந்த புவியியலாளர்களால்சிறப்புற்றிருந்தது. அத்தகைய சிறப்பிற்கு பெரும்பங்காற்றியவர்களில் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் மூத்தவர் — முதன்மையானவர்.

யாழ். குடாநாடு மட்டுமன்றி வடக்குக்கிழக்கெங்கனும் உள்ள புவியியல் ஆசிரியர்களை உருவாக்கிய பெருமையும்அவருக்கு உண்டு. அத்துறை சார்ந்த அவரின் ஆய்வுக்கட்டுரைகளும்,நூல்களும்சஞ்சிகைகளும் புவியியலின் எதிர்கால விருத்திக்கு - இளஞ் சமூகத்திற்கு நிச்சயப் பேருதவியாக அமையும் என்பதுடன், புவியியலில் துறைபோன அவரின் அறிவுத்திறனை - பட்டறிவை அவரின் மறைவால் தமிழ் மண் பெற்றுக் கொள்ள முடியாது போனமை துரதிஷ்டமே.

யுத்த சூழ்நிலை இடம்பெயர்வு ஆகியவற்றின் மத்தியில் புத்திஜீவிகளின் வெளியேற்றம் துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில், தனது சொந்த மண்ணில் உறுதியோடு நின்று இறுதி மூச்சுவரை சேவை புரிந்த பேராசிரியர் பாலச்சந்திரனை தமிழ்மண் ஒருபோதும் மறந்து விடாது.

# ஈழத்தில் சைவத் தமிழ் வளர்த்த சான்றோன்

# அவரே எங்கள் காலத்துக் குறுமுனி 'சொக்கன்'

**நயினை கி. கிருபானந்தா**

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்".

என்றார் வள்ளுவர்; எவராலும் பேணித்தமராக் கொள்ளத்தக்க பெருந்தகை அறிஞரும்- பெரியோருமாகிய வித்துவான் க.சொக்கலிங்கம் ஐயா நாம் வாழும் காலத்தில் எம்மிடையே வாழும் குறுமுனி.

அறிஞர்களையும் - பெரியோர்களையும் மதித்து. வாழப்பழகுதல் நல்லதொரு வாழ்க்கை நெறியாகும். பெரியோர்கள் ஆசி எமக்குக் கிடைப்பதால் எமது வாழ்வு வளம் பெறுகின்றது. அவர்களை மதித்துப் போற்றுவதால் எமக்குப் பெருமை சேருகிறது. இதனால் நாம் எமது எதிர்கால சமூகத்தினருக்கும் வழிகாட்டினோம் என்ற பெருமைக்குள்ளாகின்றோம். பெரியோர் துணை எமக்குக் கிடைக்கும் போது இன்னா செய்யாமை - இனியவை கூறல் ஊக்கமுடைய வாய்மை-போன்ற நல்ல பண்புகள் எம்மை வந்தடைகின்றன.

### குருபக்தி

முற்காலத்திற் குருகுல முறையிற் கல்வி கற்கும் போது மாணவர்கள் குருபக்தியுடன் செயற்பட்டுத் தமது வாழ்க்கையினை வளமாக அமைத்துக் கொண்டனர். குருபக்தி அவர்களுக்குச் சகல செல்வங்களையும பெற்றுக் கொடுத்தது. வாழ்வும் வளமாய் அமைந்தது. உயர்ந்தார்கள். நிம்மதியாய் வாழ்ந்தார்கள். அவர்கள் வழிவந்த நாங்கள் அவ்வாறு குருபக்தியுடன் செயற்பட சற்று சுணங்குகின்றோம். எங்கள் தவறை உணர்ந்து பெரியோர்களையும் அறிஞர்களையும் மதித்து வாழப் பழக வேண்டும். மூதறிஞர் சொக்கன் தமிழ் உலகுக்கும்; சைவ உலகுக்கும் அவர் தமது கவிதையால் - கட்டுரையால் சிறுகதையால் - நாவலால் நாடகத்தால்-பேச்சால் காட்டிய நல்வழிகள் போற்றுதற்குரிய பழைமைக்குப் பழைமையாய் புதுமைக்குப் புதுமையாய் அவர் வாழ்ந்து காட்டி எம்மையும் வாழ்விக்கும் முறை சிறப்பானது.எழுத்துலகில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம். காலத்துக்கேற்ற புதுமையும் பொலிவும் குன்றாமல் எழுதி எல்லோரி உள்ளத்தமர்ந்த உத்தமனாய் வாழ்ந்து வருகின்றார் இதற்கு அவரின் ஆழ்ந்தகன்ற கல்வியறிவேகாரணம் எனலாம். அவர் தொட்டுத் துலங்காத துறைகள் இல்லை.

### வரலாறு உண்டு

சொக்கன் அவர்களுக்கு ஒரு வரலாறு உண்டு. அதேபோல் எம்முடைய வரலாற்றிலே சொக்கனுக்கும் ஓர் இடம் உண்டு. அவரின் கையில் இருப்பது பேனாவா இல்லை. சமுதாயத்தின் கோணல் மாணல்களை, நெளிவு சுளிவுகளைப் பளிச்செனப்படம் பிடித்துக் காட்டும்''எக்ஸ்ரே''கருவியா என்ற எண்ணம் எம்மவரிடையே அடிக்கடி தோன்றுகின்றது.

வாழும் போதே அறிஞர்கள்—கலைஞர்கள் வாழ்த்தப்படவேண்டும். அப்போது தான் அவர்களின் உச்சப் பயனை நடுெறும். வாழ்த்தப்படும் அறிஞர் வாழ்த்தோடு மயங்கி நிற்காது மேலும் வாழ்த்துப் பெறத் தீவிரமாக உழைத்து நல்ல கருத்துக்களை, நல்லபண்புகளை நாட்டுக்கு நல்குவர்; வாழும்போதே வாழ்த்தப்பட வணங்கப்பட வேண்டிய ஓர் பெரியார். வித்துவான் க.சொக்கலிங்கம் என்றால் மிகையாகாது. ■

### திறனாய்வுக்களம்

# அல்லற்பட்ட மக்களின் உள்ளக் குமுறல்களைக் காட்டும், சோ.ப.வின் "ஆபிரிக்கக் கவிதை" நூல்

**கலாநிதி எஸ். ஜெபநேசன்**
(பேராயர் தென்னிந்திய திருச்சபை)

நான் க.பொ.த (சா/த) படித்துக் கொண்டிருந்த 'பொழுது platle of Gold' என்ற கவிதைத் தொகுப்பு ஆங்கிலப்பாடத்திற்கு ஒருபுத்தகமாக இருந்தது.

### இன்பக் கனவுடன் இறப்பு

இந்தத் தொகுப்பில் எச். டபிள்யூ- லோங் பெல்லோ என்ற கவிஞரின் 'அடிமையின் கனவு' என்ற கவிதைஒன்றையும் சேர்த்திருந்தார்கள் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்க கரும்புத் தோட்டங்களிலே வேலை செய்வதற்கு. நுகம் வீசிப் பிடிக்கப்பட்ட அடிமையின் கனவை லோங்பெல்லோ எழுதியிருந்தார். அந்தக் கவிதையைப் படிக்கும் பொழுது என் கண்கள் கலங்கி விடும்! 'அடிமை தனது வேலைத் தலத்தில் நித்திரையாகி விடுகின்றான். தன் மனைவியையும், பிள்ளைகளையும் ஆபிரிக்கா காட்டில் கண்டு குதூகலிக்கின்றான். தான், மன்னனைப் போல் நைகர் நதியோரமாக குதிரையில் சவாரி செய்வதைப்பார்க்கின்றான்; இரவில் நீர் யானைகளும், சிங்கங்களும் இரைச்சல் போடுவதைக்கேட்கின்றான். எல்லா இரைச்சல்களும், பாடல்களும் விடுதலைக்கு கட்டியம் கூறுவது போல் இருக்கின்றன, இந்த இன்பக்கனவைக் கண்டு கொண்டிருக்கும் பொழுது, கண்காணி அவனைச் சவுக்கால் அடிக்கின்றான் ஆனால் அந்த அடிமை எழுந்திருக்கவில்லை. அவன் அந்த இன்பக் கனவோடு இறந்து விடுகின்றான்.' அடிமை வாழ்வின் வேதனையை ஒரு வெள்ளைக்காரப் புலவன்இவ்வாறுபடம் பிடித்துக் காட்டினான். வெள்ளைக்கார உள்ளங்கள் நெகிழ்ந்து போயின, அடிமை முறைக்கு லிங்கன் முற்றுப் புள்ளி வைத்தார்;

| | |
|---|---|
| **நூல்:** | **ஆபிரிக்கக் கவிதை** (மொழிபெயர்ப்பு) |
| **ஆசிரியர்:** | சோ. பத்மநாதன் |
| **வெளியீடு:** | இணுவில் கலை இலக்கிய வட்டம் |
| **பக்கங்கள்:** | XXIII + 126 |
| **விலை:** | 180 ரூபா. |

### நிறைவு தராது

ஆனால் இந்தக் கவிதை, ஒரு இனத்தின் உள்ளக் குமுறல்களை இன்னொரு இனந் தான் பாடியது. ஒருவனுடைய அல்லது ஒரு இனத்தானுடைய உணர்ச்சிகளை இன்னொருவன் விபரிப்பது அந்தப் பணிக்கு நிறைவு தருவதாக இருக்கமாட்டாது. வோல்டர் எஸ்; சேணியர் என்ற ஆங்கிலக்கவிஞர்'இலங்கையின் அழைப்பு' என்ற கவிதையிலே கூறியவாசகம்மனங் கொள்ளத் தக்கது.

'என்குரல் உன்புகழ் பாடிட ஏற்றிடு தாயே உன்னரும் மைந்தர்கள் உணர்ந்துனைப் போற்றிடும் வரை'

இந்தப் பணியைத்தான் ஆசிய ஆபிரிக்க நாடுகளிலே வெள்ளைக்காரப் புலவர்கள் செய்தார்கள்;

### நிஜத்தைக் காண்கின்றோம்

இன்று ஆசிய ஆபிரிக்க புலவர்கள் தம் உணர்ச்சிகளை சம்பூரணமாக விவரிக்கத் தொடங்கி விட்டனர்;

அன்பர் சோ.ப. மொழி பெயர்த்து வெளியிட்ட 'ஆபிரிக்கக் கவிதை' அல்லறபட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் ஒரு மக்கட் கூட்டத்தின் உள்ளக் குமுறல்களையும் மன வேதனைகளையும் பாதிக்கப்பட்ட மக்களின்வாயிலாகவே கூறுகின்றன இதனாலேதான் இககவிதைகளில்ஒருநிஜத்தை அல்லது மெய்மையைக்காண்கின்றோம்;

மொழிபெயர்ப்பு மூலக்கவிதையின் அழகையும், உணர்ச்சியையும் எடுத்து வழங்குமா என்றகேள்வியும் சோ.ப.வின் நூலிலேகேட்கப்பட்டுள்ளது,

அது மொழி பெயர்ப்பாளனுடையஉள்ளத்தையும், ஆற்றலையும் பொறுத்த விடயமாகும். 'உமார்கய்யாம்' என்ற பாரசீகக் கவிதை ஆங்கிலத்தின் வழியாகவே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. கவிமணியின் 'உமார் கய்யாம்' தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவோ பிரபல்யம் அடைந்து விட்டது அவ்வாறு தான் தாகூரின் 'கீதாஞ்சலியும்' 'கனிகொய்தலுமாகும்.'

### இரு மொழிப் புலமை

சோ.ப. கவிமணியைப் போல் ஒரு கவிஞர், அதுமட்டுமன்றிநாடறிந்த இருமொழிப் புலவர் ஏ.ஜே.கனகரத்தினா கூறுவதனைப் போலசோ.ப. 'An accomplished bilngul' ஆகவே 'ஆபிரிக்கக் கவிதை' என்ற தொகுப்பில் ஆங்கில அறிவு நிறையப் பெற்ற ஒரு தமிழ்க் கவிஞனின் கைவண்ணத்தைக் காணலாம்.

சோ.ப. தான்படித்து ரசித்தவற்றைத் தனது சமுதாயத்தைச்சேர்ந்தவர்களுமஅறிந்து

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## சமாதானம்

கட்டறுக்க வொண்ணாக்
கருவி கரணாதியெல்லாஞ்
சுட்டறுத்து நிட்டையிலே
தூங்குவது மெக்காலம்?

**பத்திர கிரியார்**

என்னை உன் சொரூபத்தில் ஒடுக்கினாலொழிய சாமாதானத்தை நான் எங்ஙனம காண்பேன், ஈசா?

சமாதானம் வேண்டுமென்று உலகத்தவர் ஓலமிடுகின்றனர்; ஆனால் அவர்கள் உள்ளத்தில் ஓயாது பொங்கி யெழுந்து கொணடிருப்பது போராட்டமும் சஞ்சலமுமேயாம் தான்தனதுஎன்பனவற்றைத்துறந்தார்க்கன்றி நிலைத்த சமாதானம் உண்டாகாது;

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்**

# தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்புக்கு கூட்டணி ஆதரவாளர்கள் வரவேற்பு

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமைக்காக தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ்அணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்துஉருவாகிய கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தலில்வடக்கு கிழக்குமாகாணத்தில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதை மனப்பூர்வமாக வரவேற்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

நேற்று யாழ் மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் கட்சி ஆதரவாளர்களின் கூட்டம் நடைபெற்றது;

இக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உடனடி யுத்த நிறுத்தம், வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கம், விடுதலைப் புலிகள் மீதானதடையை நீக்கி நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடத்துதல், மற்றும்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி கூட்டமைப்பு எதிர்வரும் தேர்துலில் போட்டியிடவுள்ளதை ஆதரிப்பதென்றும் கூட்டணியின் ஆதரவாளர்கள் ஏகமனதாக தீர்மானம் நிறை வேற்றியுள்ளனர்;

(இ)

### புலிகள் அதிரடித்

கடற்படையினருக்கு உதவும் பொருட்டு அங்கு விரைந்து வந்த குண்டுவீச்சு விமானங்கள்சரமாரியாகக்குண்டுகளை வீசித் தள்ளின. இதனை அடுத்து கடற்படையினரின் ஏனைய படகுகள் பின்வாங்கித்தப்பிச்சென்று விட்டதாக விடுதலைப் புலிகள் மேலும் அறிவித்துள்ளனர்;

இதேவேளை இச்செய்தி எழுதும் வரைஇம்மோதல் சம்பவம் தொடர்பாக அரச தரப்பு, தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை;

(வ)

### பொலிசார் காயம்

(வவுனியா)

வவுனியா பண்டாரக்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற் கொண்டகிரனெட் தாக்குதலில் ஒரு பொலிசார் காயமடைந்துள்ளார்:

இக் கிரனெட் வீச்சுச் சம்பவம் நேற்றுக் காலை 7மணியளவில் இடம் பெற்றது,

(ம)

## மலையகத்தில் ஈ.பி.டி.பி போட்டியிடாது!

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் மலையக மக்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டதுஅத்துடன் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோளைஏற்றுஈ.பி டி பிமலையக மாவட்டங்களில் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கிக் கொள்கிறது;

இவ்வாறு கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார் மலையகத்தைச் சேர்ந்த கட்சியின் முக்கிய பிரமுகர்கள்மத்தியில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்;

கொழும்பு மாவட்டதில் எமது கட்சியின் சார்பில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும். கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் எமது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து எடுத்து விளக்கும் சந்தர்ப்பமாகவும் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதையே தமிழ்பேசும் மக்கள் முழுமனதுடன் விரும்பி நிற்கிறார்கள் என்பதை எடுத்துணர்த்துவதற்காகவும் இங்கு எமது கட்சி போட்டியிடும், எனவும் தெரிவித்தார்;

# 12- வது பொதுத் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. கட்சியே வெற்றி பெறும்

## பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்க

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெளிவான கொள்ளைகளைப் பின்பற்றுகிறது. எனவே எதிர்வரும் 12 ஆவது பொதுத் தேர்தலில் அதற்கு அமோக வெற்றி கிடைக்கும் என்று பிரதமர் ரட்ண ஸ்ரீ விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்;

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது கட்சியில் இருந்து கொண்டு, அரச வங்கிகளில் கோடிக் கணக்கில் கடன் அவற்றை திருப்பிச் செலுத்தாது விலகிய மோசடிப் பேர்வழிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது;

இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் திட்டமொன்றை கொண்டுவர அரசு தயாராக இருந்தது. ஆனால் அந்தச் சமயம் பார்த்து இந்த மோசடி சூழ்ச்சிக் காரர்களின் ஆதரவாளர்கள் பொது ஜனஐக்கிய முன்னணியில் இருந்து விலகி விட்டார்கள் என்று பிரதமர் மேலும் கூறினார்.

தேசப்பற்றுள்ள எந்த ஒரு அரசியல் வாதியும் இது போன்ற செயல்களை செய்வது கிடையாது. எனவே புதிய அரசு அமைக்கப்பட்டதும் பல்வேறு புதிய சட்டங்கள் நிறை வேற்றப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதமர் மேலும் கூறியுள்ளார்; (செ-7)

### வன்னியில்

பொக்கணை வலையர்மடம் ஆகிய கிராமங்கள் மீது விமானப்படையினர் குண்டுத் தாக்குதலை மேற் கொண்டதாகவும் இதில் பொதுமக்கள் பலர் காயமடைந்ததாகவும் புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித்துள்ளது;

(ந-4)

### மீன்பிடித்தடை

களை அனுப்பியிருந்தது;

ஒருவார காலத்தில் அவர்களிடம் இருந்து சாதகமான பதிலெதுவும் வராததையடுத்து, தாம் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்ததாக கடற்றொழிலாளர் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறும் போது பருத்தித்துறை நகரில் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடி உண்ணாவிரதத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளனர்.

மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டத்துக்கு வடமராட்சி பொது அமைப்புக்கள் மற்றும்பருத்தித்துறைஇறங்குதுறையில் பணியாற்றும் தொழிலாளாகள் பாரவூர்தி சங்கத்தினர் ஆதரவு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (இ- 23)

### முல்லை

(இசிடேல் மேரிலூட்ஸ்)
யாழ்மாவட்டம்
● மேஜர் சிவா
(வேலாயுதம் தயாபரன்)
யாழ்மாவட்டம்
● லெப்டினட் வினோதன்
(யோகேஸ்வரன் திலீப் குமார்)
கிளிநெச்சி
● கப்டன் செல்லப்பன்
(இராமையா மகேந்திரன்)
வவுனியா

ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர்.

(ம)

## இராஜமனோகரி போட்டியிடார்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் ஐக்கிய தேசியக் கட்சியினர் மத்தியில் இழுபறி நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

ஐக்கிய தேசியக் கட்சியின் முனனாள் எம்பியான திருமதி இராஜமனோகரி புலேந்திரன் இம்முறை தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாகவும் பதிலாக கிஷோர் சிவநாதன் போட்டி இடப்போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

(வ)

### பேராசிரியர்--

பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அங்கு பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு பூதவுடல் அங்கிருந்து கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் (ந)

## கூட்டணியின் வேட்பாளர்களை தெரிவுசெய்ய குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு 5பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுளளது.

இந்தக் குழுவினர் இன்று காலைகூடிதேர்தலில்போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்யவுள்ளனர்.

இதேவேளை முன்னாள் எம். பி.மாவைசேனாதிராசா அம்பாறை மாவட்ட தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்வது சம்பந்தமாக அங்குள்ள கட்சிப் பிரமுகருடன் கலந்துரையாடவுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது; (ம)


சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அனுசரணையுடன்
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தும்

**விபுலானந்தன் ஞாபகார்த்த**

**மின்னல் வேக**

கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி [ஆண்கள்]
(பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு மட்டும்)

விண்ணப்ப முடிவுத் திகதி: 26-10-2001

மேலதிக விபரங்களுக்கு:

செல்வி இ. அருளம்பலம்
உடற்கல்வி அலகு,
யாழ். பல்கலைக்கழகம்.

[3885]



**யா/யூனியன் கல்லூரி**

**பரிசுத்தினமும் மலர்வெளியீடும் - 2001**

கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 2001 - 10 - 23 செவ்வாய் காலை 9-00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நிகழவிருப்பதால் தங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

தலைவர்: திரு. சு. புண்ணியசீலன் அவர்கள் (அதிபர்)

பிரதம அதிதி: பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் (விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

ஆசி வழங்குபவர்: துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சிறப்பு விருந்திளர்: திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள் (பிரதிக்கல்விப்பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)

திரு. கா. சந்திரபாலன் அவர்கள் (உ. க. ப தெல்லிப்பழை கோட்டம்)

பரிசில் வழங்குபவர்: திருமதி இராஜினி குமாரவடிவேல் அவர்கள்

கல்லூரிச் சமூகம்

யா/யூனியன் கல்லூரி,
தெலலிப்பழை.

(கி-2768)



**கண்ணீர் அஞ்சலி**



இந்த மண்ணில் நிலைத்து வாழ்ந்த புத்திஜீவி
யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**

தன்விழிகளை மூடிக்கொண்டது! ஆழ்ந்த கவலையைத் தருவதாகும்,

இவரது மறைவினால் சோகம் அடைந்திருக்கும் ஒவ்வொருவருடனும் எமது கவலைகளை பகிர்கின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

(கி 2765)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ விதாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் -22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.